1994 ஏப்ரல் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 258, திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

258—

கணியம்பாடி ஒன்றியத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

* 21309—திரு. தா. வேடியப்பன் :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கணியம்பாடி ஒன்றியம், நஞ்சுகொண்டாபுரம் கிராமத்திற்கும் சோழவரம் கிராமத்திற்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கணியம்பாடி ஒன்றியம் நஞ்சுகொண்டாபுரம் கிராமத்தில் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்னிறைப்பான் திட்டம் நல்லமுறையில் முடிக்கப்பட்டு இயங்குவதால் இக்கிராமத்திற்கு புதிதாக குடிநீர் திட்டம் தேவையில்லை. கணியம்பாடி ஒன்றியத்தைச் சேர்ந்த சோழவரம் கிராமத்தில் நடப்பு நிதியாண்டில் (1993-94) முடுக்கிவிடப்பட்ட கிராமக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் சோழவரம் மற்றும் காலனிக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு என்னுடைய போளூர் ஒன்றியம், கணியம்பாடி ஒன்றியம், இரண்டு ஒன்றியங்களிலுமே ஏறத்தாழ 67 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு மேலே கட்டி ஒவ்வொரு கிராம அடித்தள மக்களுடைய வாழ்க்கைப் பிரச்சினைகளை சாலை வசதி, குடிநீர் வசதி, மின்விளக்கு வசதி போன்றவற்றை சிறப்பான முறையில் வழிவகுத்து கொடுத்திருக்கிறது நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு. அதே வழியில் இந்தக் கிராமத்திற்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்ததற்கு நன்றி தெரிவித்து, சோழவரம், அடுத்து பெண்ணாத்தூர், பாலாத்து வண்ணான் என்று மூன்று ஊராட்சிகளுக்கு மட்டும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுத்துவிட்டால், அந்தக் கணியம்பாடி ஒன்றியமே நீர் நிறைந்த ஒன்றியமாக தேர்வு செய்யப்படும். இந்த மூன்று கிராமங்களுக்கும் இந்தக் குடிநீர் பிரச்சினையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தீர்த்து வைப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சோழவரத்தைப் பற்றி மட்டும்தான் கேட்டிருக்கிறார். ஆகவே, பெண்ணாத்தூரைப் பற்றி தனியாக அவர் அருள்கூர்ந்து வினாவை எழுப்புமாறு கேட்டுக்கொண்டு, சோழவரத்தைப் பொறுத்தவரை, இந்தக் குடியிருப்புக்காக, பகுதி குடிநீர் வசதி செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் குடியிருப்பில் இரண்டு பொதுக் கிணறுகள் மற்றும் இரண்டு ஆழ் குழாய் கிணறுகள் ஏற்கெனவே இருந்து வருகின்றன. எனினும் அவற்றின் கொடுதிறன் போதுமானதாக இல்லாத காரணத்தினால் 1993-94 ஆம் நிதியாண்டிலே முடுக்கிவிடப்பட்ட கிராமக் குடிநீர் திட்டத்தின் கீழ் சோழவரம் மற்றும் அதைச் சுற்றியிருக்கின்ற காலனிக்கு கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்க ஏற்கெனவே அரசு திட்டமிட்டிருக்கிறது. இதற்காக அமைக்கப்பட்ட ஆழ்குழாய் கிணற்றில் நீர் கொடுதிறன் போதுமானதாக இல்லாத காரணத்தினால் மீண்டும் நீர் ஆதாரம் தேடப்பட்டு வருகிறது. நீர் ஆதாரம் கிடைக்கப்பெற்றவுடன் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டு, திட்டம் விரைவில் செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. தா. வேடியப்பன்.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீர் ஆதாரம் கண்டவுடன் இதற்குண்டான ஆயத்தம் செய்யப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறியதற்கு நன்றி. அதனை இந்த ஆண்டிலே செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக இந்த ஆண்டு இந்தப் பணி விரைவிலே முடுக்கிவிடப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 259, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

259—

ஆதிதிராவிட வகுப்பிலிருந்து கிருஸ்துவர்களாக மாறியவர்களை ஆதிதிராவிடர் பட்டியலிலேயே சேர்த்தல்.

* *24631*—**டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் :**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—